பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 66

21.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற கிராம உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.பரமேஷ்வரன், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் உள்ள தன்னுடைய வீட்டு மனைக்கு இலவச பட்டா வாங்குவதற்காக திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தின் மீது கள ஆய்வு செய்து பட்டா வழங்குவதற்கு திரு.சவரியார், கிராம உதவியாளர், நிலக்கோட்டை தாலுகா அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திண்டுக்கல் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சவரியார், கிராம உதவியாளர், அவர்கள் ரூ.15,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 66
21.08.2026

VILLAGE ASSISTANT ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Parameshwaran, had applied for free patta for his house plot situated in Nilakottai taluk, Dindigul district. Tr.Savariyar, Village Assistant, Nilakottai Taluk Office, Dindigul district, conducted the field verification and demanded a bribe of Rs.15,000/- from the complainant for issuing patta. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Dindigul detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (21.08.2026). During trap proceedings, Tr.Savariyar, Village Assistant, received the bribe amount of Rs.15,000/- from the complainant. The above Village Assistant was arrested and remanded.